வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=








Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.10.2025 சனிக்கிழமை இதழ் : 298 பக்கங்கள் : 08


## போர்க்குற்றங்கள் தொடர்பில்

# சர்வதேச விசாரணை வேண்டாம் உள்ளக பொறிமுறையே போதும்!

### சபையில் அறிவித்தார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஒக்ரோபர் 25

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லை என அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நம்பகமான உள்நாட்டு பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.**



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மொழிபோல வினாக்களுக்குப் பதில் வழங்கும் போது, பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்த விடயம் தொடர்பில் தெளிவு படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் உடன்படவில்லை எனவும் பிரதமர் கூறினார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர், அந்த வாய்ப்பை பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப் படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் எனவும், அந்த செயன்முறையானது, உள்ளக செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் எனவும் பிரதமர்

07

# டில்லி செல்கிறார் சஜித்!

கொழும்பு, ஒக். 25

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நான்கு நாள் விஜயமாக நவம்பர் முதல் வாரத்தில் புதுடில்லி செல்கின்றார்.

தம்மோடு வேறு பிரதிநிதிகள் குழுவைக் கூட்டிச் செல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் தனித்து புதுடில்லி செல்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு இந்திய உயர்மட்டத் தலைவர்களோடு அவர் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபடுவார் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பின்னர் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைப்

07

# போர் காலத்தைவிடவும் நாட்டில் இப்போது பயங்கரமான நிலை!

### மொட்டுக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 25

“போர் காலத்தில் புலிகள்கூட அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளை கொலை செய்யவில்லை. போர் காலத்தைவிடவும் தற்போது பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.” - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில்

07

# சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு சொத்து குவித்த 8 பேர் மீது விசாரணை!

### யாழ்.குற்றத் தடுப்பு பொலிஸார் ஆரம்பித்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 25

வாள்வெட்டு மற்றும் போதைப் பொருள் கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டு சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்த எட்டுப் பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு சொத்துச் சேர்த்தவர்களுக்கு எதிரான விசாரணைகளை நடத்துவதற்காக விசேட பொலிஸ் பிரிவொன்று நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொலிஸ் பிரிவுக்கு

07

# செவ்வந்தி தப்பிச் செல்ல பயன்படுத்திய மீன்பிடிப் படகு அராலித்துறையில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 25

பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலையின் சூத்திரதாரி இஷாரா செவ்வந்தி இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்குப் பயன்படுத்திய படகு யாழ்ப்பாணம் அராலித்துறை கடற்கரையில் கைப்பற்றப்பட்டுள்ளது.



தெற்கில் இருந்து வடக்குக்குத் தப்பி வந்து கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் தலைமறைவாக இருந்த செவ்வந்தி, இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த சில தினங்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரும் கைது செய்யப்பட்டார்.

07

# வெளிநாடுகளால் அடிபணிய வைக்க முடியாத பெருந்தலைவர்தான் ரணில்!

### கூறுகிறார் வஜிர அபேவர்தன

கொழும்பு, ஒக். 25

“வெளிநாட்டு சக்திகளால் அடிபணிய வைக்க முடியாத தலைவரே ரணில் விக்கிரமசிங்க. அதனால்தான் நாட்டு நலன் கருதி அவர் பின்னால் அணி திரண்டுள்ளோம்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரணில் விக்கிரமசிங்க என்ற பெருந்தலைவருக்கு பதவி முக்கியம் அல்ல. ஜனாதிபதி பதவி, பிரதமர் பதவி என எந்த பதவியைக் காட்டியும் அவரை அடிபணியவைக்க முடியாது. பதவிகள் இல்லாமல்

07

# வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாட்டை அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்த திட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாட்டை தொடர்புடைய அரச திணைக்களங்களின் ஆதரவுடன் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்கு த மனேஜ்மன்ட் கிளப் - இலங்கை தீர்மானித்துள்ளது. அதற்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு அதிகாரிகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில், பிரதம செயலாளர், வடக்கின் அனைத்து மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்களின் பங்குபற்றுதலுடன் த மனேஜ்மன்ட் கிளப்பினருடன் ஆளுநர்

07

# ஏற்றுமதி வருவாய் 13 பில்லியன் டொலராக உயர்வு!

கொழும்பு, ஒக். 25

2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதித் துறை மீள்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

குறித்த காலக் கட்டத்தில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய் 12,986.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது 7 வீத வலுவான அதிகரிப்பை பிரதிபலிக்கிறது என்று

07

# பனைசார் தொழில்துறையில் முதலீடு செய்வதற்கு வாருங்கள்!

### அமைச்சர் சமந்த வித்யாரத்ன அழைப்பு

கொழும்பு, ஒக். 25

பனைசார் தொழில் துறையில் முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தயாராகவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட

07

# அவுஸ்திரேலிய முதலீட்டாளரிடம் ரூ.180 மில்லியன் சொத்து மோசடி!

### மன்னாரில் இரண்டு பேர் கைது

மன்னார், ஒக். 25

அவுஸ்திரேலிய முதலீட்டாளர் ஒருவரின் நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில், மன்னாரில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


குறித்த இருவரும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மரக்கறி சந்தையை பழைய இடத்துக்கு மாற்றவேண்டும்!

## வர்த்தகர்கள் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம்,ஒக். 24

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை முன்னர் இயங்கிய. இடத்துக்கு மாற்றக்கோரி பருத்தித்துறை வர்த்தக சமூகம் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை 9:00. மணியளவில் முன்னெடுத்தன.

பருத்தித்துறை நவீன சந்தையிலிருந்து பருத்தித்துறை நகர சபை வரை சென்று அங்கு தவிசாளர் மற்றும் செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களும் சில மணிநேரம் மூடப்பட்டே குறித்த பேரணி இடம் பெற்றது.


சுமார் 200 வரையானோர் கலந்துகொண்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில், புதிய இடத்துக்கு மாற்றப்பட்ட மரக்கறி சந்தையை மீண்டும் நவீன சந்தை தொகுதிக்கு மாற்றித் தருமாறு கோசமெழுப்பினர்.

இதேவேளை, குறித்த சந்தையை பழைய இடத்துக்கு மாற்றித் தருமாறு மகஜரை வழங்குவதற்கு செயலாளரையும், தவிசாளரையும் நகர சபைக்கு வெளியே வருமாறு வர்த்தகர்களால் கோரப்பட்ட நிலையில் சுமார் 40 நிமிடம் வரை செயலாளர் வெளியே வந்து மகஜரை தவிசாளருடன் இணைந்து பெற்றுக்கொள்ள மறுத்திருந்தார்.

வர்த்தகர்கள் விடாப்பிடியாக செயலாளர் வெளியே வரவில்லை எனில் தாம் நகர சபை வாயிலை விட்டு எழுந்திருக்கமாட்டோம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க நகர சபைச் செயலாளர் வெளியே வந்து மகஜரை தவிசாளருடன் இணைந்து பெற்றுக்கொள்ளுமாறு சமரசத்தில் ஈடுபட்ட நிலையில் அதற்கு இணங்கிய செயலாளர் தவிசாளருடன் இணைந்து மகஜரை பெற்றுக்கொண்டார்.

மகஜரை பெற்றுக்கொண்ட பருத்தித்துறை நகரசபை தவிசாளர், வர்த்தகர்களின் கோரிக்கையை மதித்து தாம் விரைவில் சந்தையை பழைய இடத்துக்கு மாற்றுவதற்குரிய ஆய்வுக்குழு அறிக்கை கிடைக்கப்பெற்றதும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்த நிலையில் போராட்டம் நிறைவு பெற்றது. (அ-02-03)



# கொட்டப்படும் கழிவுகளினால் மக்கள் பெரும் அசௌகரியம்!

## விரைந்து செயல்பட்ட மாநகரசபை

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் பிரதான அங்காடிக் கடைகள் அமைந்துள்ள இடமான கந்தப்பசேகரம் வீதி, பழைய கரன் தியேட்டர் அருகாமையில் உணவுக்கழிவுகள் போடப்படுவதால் அங்கு துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாநகரசபை உறுப்பினர்களான பிரதி மேயர் தயாளன், சாருஜன் மற்றும் சதீஸ் ஆகியோர் குறித்த இடத்துக்கு நேரில் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கையாக கழிவுகள் அகற்றப்பட்டு காணி உரிமையாளர்கள் இல்லதாவிடத்து மாநகர சபையால் சுற்றி வரவேலி அமைத்து, கண் காணிப்பு கமெரா மூலமாக நட வடிக்கைகள் மேற்கொள்ள மாந கரசபை தீர்மானித்துள்ளது. (அ-05)

# சீரற்ற காலநிலை காரணமாக யாழில் 2 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 25

நிலவும் மழையுடன் கூடிய காற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/45 கிராம சேவகர் பிரிவில் பலத்த காற்று காரணமாக ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த அறுவர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-05)

# பருத்தித்துறை மரக்கறி சந்தையை நேற்று பார்வையிட்ட இளங்குமரன்!



யாழ்ப்பாணம், ஒக். 25

பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள் , வர்த்தக சங்கத்தினர் மரக்கறிச் சந்தையை நவீன சந்தைத் தொகுதியில் இடமாற்றம் செய்து தருமாறு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சந்தைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனு டன் வியாபாரிகள் தர்க்கத்தில் ஈடுபட்டனர். சந்தைக்கு உரிய தீர்வில்லையேல் தீக்குளிப்போம் என வியாபாரி ஒருவர் சத்தமிட்டார்.

நிலைமைகளை அவதானித்த பாராளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் கலந்தாலோசித்து நல்ல முடிவு எட்டப்படும் எனத் தெரிவித்தார். (அ-8)

# கொக்குவில் இந்து படுகொலை நினைவு நேற்று அனுஷ்டிப்பு!



யாழ்ப்பாணம், ஒக். 25

இந்திய ஆக்கிரமிப்பு படையினரால், யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து கல்லூரியில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கொக்குவில் இந்து கல்லூரி வெளிவாசலில் இடம் பெற்றது.

இதன்போது 1987 ஆம் ஆண்டு இதே நாளில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களை நினைவு கூர்ந்து பொதுச்சுடரேற்றப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது. கொக்குவில் படுகொலை நினைவேந்தல் குழு நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ-3)

# அடுத்த தலைமுறையினருக்கு எம் கலாசாரத்தை கையளிக்க பண்பாட்டு பெருவிழாக்கள் தேவை!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 25

அடுத்த தலைமுறைக்கு எமது தனித்துவமான பண்பாடு, கலாசாரத்தைக் கையளிப்பதற்கு இவ்வாறான பண்பாட்டுப் பெருவிழாக்கள் தேவையாக இருக்கின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலரும், மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான சு.முரளிதரன் தலைமையில், இரனைமடு தாமரைத் தடாகம் மண்டபத்தில் நடைபெற்றது.




நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் இரணைமடு கனகாம்பிகை ஆலய வழிபாடுகளைத் தொடர்ந்து, இரணைமடுச் சந்தியிலிருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், தமிழர்களுக்கென தனித்துவமான பண்பாடு - கலாசாரம் உள்ளது. அதிலும் விருந்தோம்பல் என்பது தமிழர்களுக்கென்றே தனித்துவமான பண்பாடு. நாம் இன்று பலவற்றை மறந்து வருகின்றோம். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை என்றபோதும் எங்களுக்குரிய தனித்துவங்களை கைவிட முடியாது. அதை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது.

இன்றைய பண்பாட்டுப் பெருவிழாவில் பிள்ளைகளின் நிகழ்வுகள் சிறப்பாக இருந்தன. நிச்சயம் அவை பாராட்டப்பட வேண்டியன. கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம் பெற்றிருந்தது. அவர்கள் கலைக் காக ஆற்றும் பணிகளை கௌர விப்பதுடன் அது அவர்களை இன்னமும் ஊக்கப்படுத்தும் ஒன்றாகவும் இருக்கும் - என்றார்.

இந்த நிகழ்வில், தமிழமுதம் அமைப்பின் ஏற்பாட்டில் 46,000 தமிழ்ப் பெயர்கள் அடங்கிய நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், கலைஞர்கள், ஆலயங்களின் வரலாறுகளை உள்ளடக்கி மாவட்டச் செயலக இணையத் தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ஈழநாடு
25.10.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

ஏராளம் பேசியாகிவிட்டது. ஆனால், எந்தவொரு விடயமும் செயலில் நிகழவில்லை. இந்த நிலையில் ஒருவேளை மாகாண சபைகள் தேர்தலை அரசாங்கம் நடத்தாதுவிட்டால்கூட தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? வெறுமனே வழமைபோல் பேசிக் கொண்டிருக்கப் போகின்றனவா?

யுத்தத்துக்குப் பின்னரான நீதி கோரல் அரசியல் சிறியளவில்கூட முன்னேற்றத்தைப் பதிவு செய்யவில்லை. இன்றைய உலக அரசியல் சூழலில் நீதிக்கான கோரிக்கைகள் பரிகசிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், நீதிக்கான கோரிக்கைகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பதெல்லாம் வெறும் கண்ணாமூச்சி விளையாட்டாகவே முடிவுறும். இதுவரையில் அதுதான் நடந்திருக்கிறது.

தற்போதுள்ள சூழலில் வெறும் அறிக்கைகளுக்கு அப்பால் எதனையும் செய்யக்கூடிய நிலையில் தமிழ் கட்சிகள் தங்களை நிரூபிக்கவில்லை. இந்த விடயங்களை துல்லியமாக மதிப்பிட்டே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் நகர்வுகளை நன்கு திட்டமிட்டு நகர்த்திவருகிறது. ஒரு புறம் வெளியுலக அரசியல் நிலைமைகளைத் துல்லியமாக மதிப்பிட்டு, அதற்கேற்ப அதனை எதிர்கொள்கிறது. மறுபுறம் உள்ளூர் நிலைமைகளை கணித்து அதற்கேற்ப நகர்கிறது. தமிழ் கட்சிகளால் கருத்தொருமித்து எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்க முடியாது என்பதைத் துல்லியமாகக் கணிப்பிட்டு அதற்கேற்ப அரசியலை கையாள முற்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாக அறிவித்திருக்கிறது. மறுபுறம் வாய்ப்பு கிடைத்தால் அதனை நடத்தாமல் விடுவதற்கான காரணங்களையே ஜே. வி. பி. கவனத்தில் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை, அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதை தவிர்க்க முற்பட்டால் தமிழ் கட்சிகள் அதனை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றன? அதனை தடுத்து நிறுத்த என்ன செய்யப் போகின்றன?

யுத்தத்துக்குப் பின்னரான அரசியல் சூழலில் எவ்வாறான அரசியலை முன்னெடுக்க வேண்டுமோ அதனை நோக்கி தமிழ் கட்சிகள் சிந்தித்திருக்கவில்லை. வாய்ப்புகளை தவறவிட்டால் என்ன நிகழும் என்பதில் போதிய அனுபவங்கள் இருந்தும்கூட, மீண்டும் வாய்ப்புகளை தவறவிடும் தவறுகளையே தமிழ் கட்சிகள் தொடர்ந்தன. அனுபவம் வாய்ந்த நபராகக் கருதப்பட்ட இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு காலத்துக்குப் பொருத்தமான அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்குத் தவறியது.

ஓர் அரசியல் தலைமை என்பது சூழ்நிலையை கையாளும் திறன் கொண்டதாக இருக்கவேண்டும். மாறாக, உணர்வுகளுக்கு தீனிபோடும் அரசியலை முன்னெடுக்கக்கூடாது. ஒரு மக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவது என்பது மக்களை திருப்திப்படுத்துவதல்ல. மாறாக, மக்களின் அறியாமையை போக்கி அவர்களுக்கு சரியான பாதையை காண்பிப்பது. எது சரியானது - எது காலத்துக்கு உகந்தது. எந்த நிலைப்பாட்டை எடுத்தால் இனம் தப்பிப்பிழைக்க முடியும் என்பதைத் துல்லியமாக கணித்து செயல்படுவதுதான் ஒரு தலைமையின் கடமையாகும்.

ஆனால், யுத்தம் முள்ளிவாய்க்காலில் பேரழிவுடன் முடிவுற்றபோது யதார்த்தமான அரசியல் பாதையொன்றை கண்டடையவும் அதன் வழித்தடத்தில் பயணிக்கவும் தமிழ் தலைமைகள் முயற்சிக்கவில்லை. இதன் விளைவு என்ன? இன்று சாத்தியம் என்று கருதப்படும் ஒன்றைச் செய்யுங்கள் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்குக்கூட பலமற்ற தரப்பாகவே தமிழர் தரப்பு இருக்கிறது. இந்த நிலையில் ஓரளவாவது தமிழர்களுக்கான அரசியல் குரலை பாதுகாக்க வேண்டும் என்றால் தமிழ் கட்சிகள் மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் விடயத்தில் உறுதியாகவும் - காத்திரமாகவும் ஒன்றுபட்டு எதிர்வினையாற்ற வேண்டும்.

## ஒழுங்கமைக்கப்பட்ட 30 குற்றக்குழுவினர்களின் சொத்துக்கள் தொடர்பில் பொலிஸ் விசாரணை!

கொழும்பு, ஒக். 25

பாதாள குழுத் தலைவரான கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட சுமார் 30 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுவினர்களின் சொத்துக்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வு பிரிவு இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஏற்கனவே, பத்மேவுடன் தொடர்புடைய சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில், கம்பஹா - கெஹல்பத்த பகுதியிலுள்ள சுமார் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான 28 பேர்ச் காணியும் உள்ளடங்குவதாக விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த காணி அண்மையில் சட்டரீதியாக முடக்கப்பட்டது.

இதேவேளை, லொகு பெட்டி என்றழைக்கப்படும் மற்றுமொரு பாதாள உலக குழு உறுப்பினரின் சட்டவிரோத சொத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## பத்மேவுடன் தொடர்பிலிருந்த 5 நடிகைகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஒக். 25

குற்றப் புலனாய்வு துறையால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கெஹல்பத்தர பத்மேவின் கைபேசி தரவுகளை பகுப்பாய்வு செய்ததில் ஐந்து பிரபல நடிகைகள், மொடல் அழகி ஒருவரும் தொடர்பில் இருந்தமை தெரிய வந்துள்ளது.

அவர்கள் ஆறு பேருக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுத் துறை இந்த ஆறு பெண்களையும் அழைத்து அவர்களின் வாக்கு மூலங்களை பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பத்மேவின் கைபேசிகள் சி.ஐ.டியினரால் பறிமுதல் செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

அதில், பிரபல நடிகை ஒருவர் தனது காதலனுடன் இருக்கும் ஆபாச காணொலி கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், மற்றைய நடிகைகள் நால்வரினதும் மொடல் அழகியினதும் படங்களும் கைபேசியில் காணப்பட்டன. இந்தப் படங்கள் கெஹல்பத்தர பத்மேவுடன் வெளிநாடுகளில் எடுக்கப்பட்டவை என்றும் தெரிய வந்துள்ளது.

(ஐ)

## மகளின் மருத்துவ செலவுக்காக மதுபானம் கடத்தியவர் கைது!

கொழும்பு, ஒக். 25

தனது மகளின் மருத்துவ செலவுக்காக சொகுசு காரில் சட்டவிரோதமாக மதுபான போத்தல்களை கடத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - தொட்டுவாவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவரிடமிருந்து 30 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர், மாரவில பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

மேலதிக விசாரணைகளை தொட்டுவாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடகமாடி ரூ. 2 கோடி கொள்ளை; பெண் ஒருவர் உட்பட 8 பேர் கைது

கொழும்பு, ஒக். 25

தனியார் வங்கி ஒன்றுக்கு சொந்தமான பணத்தை வாகனத்தில் எடுத்துச் சென்ற போது கொள்ளையடிக்கப்பட்டது போன்று நாடகமாடி 2.2 கோடி ரூபாய் பணத்தை கையாடிய சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் 8 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பெண் ஒருவரும் அடங்குவார்.

ஓட்டோ ஒன்றை சோதனையிட்ட பொலிஸார் அதில் 30 இலட்சம் ரூபாயை கண்டுபிடித்தனர். இதைத் தொடர்ந்து அந்த ஓட்டோவும் அதில் பயணித்த ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அந்தப் பணம் கொள்ளையடிக்கப் பட்டதாக நாடகமாடப்பட்ட பணம் என்பது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் மற்றொரு நபர் 15 இலட்சம் ரூபாயுடன் கைது செய்யப்பட்டார். இதன், பின்னர் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதானவர்கள் 25 - 45 வயதுடையவர்களாவர். மேலதிக விசாரணைகளை களனி குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டீவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 25 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 08
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தி




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**இடபம்**

பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்கள்.

**கடகம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**

எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும்.

**கன்னி**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**துலாம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மன நிம்மதி ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலையையும் முடிக்க முடியாமல் தாமதங்கள் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**தனுசு**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். புது அத்தியாயம் தொடங்கும்.

**மகரம்**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். அசதி சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**

பெற்றோரின் ஆதரவு பெருகும். எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**மீனம்**

சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

# யாழில் விடியல் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 25

மாற்றம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் விடியல் நூல் வெளியீட்டு விழா மாற்றம் அறக்கட்டளை இயக்குநர் எஸ். பெனிக்சன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் கௌரவ விருந்தினராக வளர்பிறை இயக்குநர் அருட்பணி சூசை டெமியன் அமதி அடிகளாரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

விடியல் நூலின் முதற்பிரதியை ஆளுநர், அரசாங்க அதிபருக்கு வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரான ஆளுநர் வேதநாயகன் உரையாற்றுகையில்,

நூலாசிரியர் வின்சன் பற்றிக் அடிகளார் போதைக்கு அடிமையானவர்களை மீட்பதற்காக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அதில் பல பிரச்னைகளை எதிர்நோக்கியபோதும் தனது சமூகப்பணியை இடைவிடாது தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். இந்த நூல் சமூகத்தின் விடியலுக்கான பொருத்தப்பாடுடையதாக காணப்படுகிறது என்று அருட்கலாநிதி வின்சன் பற்றிக்கை பாராட்டியதுடன் அவரின் சமூகப்பணி தொடர வேண்டும் எனவும் அதற்கான ஆதரவை தொடர்ந்து வழங்குவதாகவும் தெரிவித்தார். (எ)

# தொழில்முனைவோர் விருதுகளுக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 25

வடமாகாணத்தின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாணத்தின் சிறந்த தொழில்முனைவோர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் "வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025" நிகழ்வு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் 29-12-2025 அன்று நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தின் தொழில் முனைவோருடைய திறன்கள், அவர்களின் புத்தாக்கங்கள், தலைமைத்துவம் மற்றும் பொருளாதார பங்களிப்புகள் போன்றவற்றை பாராட்டுவதோடு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, சிறந்த தொழில்முனைவோர் தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்படுவதை உறுதி செய்வதே இவ் விருதுகளின் பிரதான நோக்கமாகும். குறிப்பாக பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரின் தொழில்முயற்சிகளுக்கு தேசிய ரீதியிலான அங்கீகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்குரியது.

வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025 இல் பெண் தொழில்முனைவோர், இளம் தொழில்முனைவோர், வேளாண்மை, உணவு சார் உற்பத்திகள், சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, மீன்பிடி, கல்வி, ஏற்றுமதிகள், கட்டிட நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு, கைவினை மற்றும் படைப்புத் துறை உள்ளிட்ட 16 பிரிவுகளில் மொத்தம் 33 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள்-2025 ற்கான விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-03)

# சிறுவர் அபிவிருத்தி குழுவின் 3ஆம் காலாண்டு குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் மூன்றாம் காலாண்டு குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் கூறுகையில்,

சிறுவர் தொடர்பான பிரச்னைகள் மற்றும் முறைப்பாடுகளை பிரதேச செயலக மட்டத்தில் பிரதேச செயலாளரின் தலைமையில் ஆராயப்பட்டு தீர்க்கப்படுவதுடன், தீர்க்க முடியாத பிரச்னைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைந்து தீர்ப்பதே இக் கூட்டத்தின் நோக்கமாகும். மேலும், மாணவர் இடைவிலகல், மாணவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அதில் 60 சிறுவர்கள் மீள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை மாணவர்களின் பிரச்னை தொடர்பில் வலய ரீதியில் தொடர்புடைய உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலை பிரதேச செயலாளர்களின் தலைமையில் முன்னெடுக்குமாறு அரசாங்க அதிபரால் கோரப்பட்டது. அத்தோடு

பிள்ளைகளின் பதிவு செய்யப்படாத பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கான நடமாடும் சேவையை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாகவும் அவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

(எ)

# அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், வேலைத் திட்டங்களை குறிப்பிட்ட கால அவகாசத்தில் முடிவுறுத்திய பிரதேச செயலாளர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்துடன், முடிவுறுத்தாத வேலைத் திட்டங்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டு திட்டங்களை நிறைவேற்றுமாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி வேலைகளின்

முன்னேற்றம் தொடர்பாகவும் வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 250 மில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களில் மீள் குடியேற்ற கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள், வடிகாலமைப்பு திட்டம், குழாய்க்கிணறு அமைப்பு, சூரிய மின்கலம் பொருந்தும் திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நிலைப்பாடு வெளிப்படாதிருக்கவே மாகாண சபை தேர்தல் தாமதிக்கபடுகிறது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

**மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த அரசாங்கம்மீது மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியும். அதனால்தான் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் மௌனம் காக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**

67 சதவீத மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின் தலைவர் அவரின் பணிமனையில் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். தேசிய பாதுகாப்பு பாரதூரமான பிரச்னைக்கு உள்ளாகியுள்ளது. அவர் வெலிகம பிரதேச சபை தலைவராக தெரிவு செய்யப்பட்ட போதும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தார்.

இனியாவது ஏனைய அரசியல்வாதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக அழுத்தத்தை அரசாங்கத்துக்கு நாம் பிரயோகிப்போம். 101 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 50இற்கும் மேற்பட்டோர் இந்த ஆண்டில் கொல்லப்பட்டனர். வருடம் நிறைவடைவதற்கு இன்னும் 2 மாதங்களே உள்ள நிலையில் இந்த எண்ணிக்கை இன்னும் எந்தளவுக்கு அதிகரிக்கும் என்று கூற முடியாது.

நாளாந்தம் துப்பாக்கிச்சூடு என்ற நிலைமை மாறி இன்று ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் துப்பாக்கிச்சூடு என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கு அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை எடுக்காததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. 1987 மற்றும் 1988களில் பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களே இன்று ஆட்சி செய்கின்றனர். அதுவே, இந்த அரசாங்கத்தின் வரலாறாகும்.

துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் ஏந்தி சிறைகளில் இருந்தவர்கள் இன்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கின்றனர். மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியும். மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இதுவரையில் தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாயின் பாராளுமன்றத்தில் அது குறித்த யோசனை ஒன்றை முன்வைத்து நிறைவேற்ற வேண்டும். ஆனால், அரசாங்கம் இதுவரையில் அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் அந்த யோசனையை நிறைவேற்ற முடியும். தேர்தல் எந்த முறைமையில் நடத்தப்பட வேண்டும் என்பதை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

# 2 தேங்காய்களுக்காக கொலை; குற்றவாளிக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஒக். 25

இரண்டு தேங்காய்களை திருடியதற்காக ஒருவரை இரும்புக் கம்பியால் அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் நபர் ஒருவருக்கு மரண தண்டணை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - ஹோமாகம மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க நேற்றுமுன்தினம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக சட்ட மாஅதிபர் 2001 ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். நியதகல பகுதியில் வயல் ஒன்றில் இந்தக் குற்றச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழக்கின் சாட்சிகள் வழங்கிய சாட்சியங்களை மதிப்பாய்வு செய்த நீதிபதி, இந்த வழக்கின் முதல் பிரதிவாதி மீது அரச தரப்பு முன்வைத்த கொலை குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. இதனால், குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

# போலி பதிவு சான்றிதழ் சொகுசு வான் பறிமுதல்

கொழும்பு, ஒக். 25

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு போலி பதிவு சான்றிதழுடன் வழங்கப்பட்ட சொகுசு வான் ஒன்றை மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு பறிமுதல் செய்துள்ளது.

இந்த சொகுசு வானின் பதிவு, மோட்டார் வாகனத் துறையின் தரவு அமைப்பை மாற்றியமைத்து செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனம் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தைச் சேர்ந்த இரத்மலானை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பாதாள குழுக்களிடமிருந்து 1947 துப்பாக்கிகள் பறிமுதல்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக். 25

நாட்டில் திட்டமிட்ட குற்றக்குழு நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலை ஒடுக்க முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இந்த ஆண்டில் இதுவரை 1947 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றக்குழு வலையமைப்புகளின் முக்கிய அங்கமாக ஆயுதங்கள் இருக்கின்றன. குற்றக்குழுக்களிடம் இன்னும் ஆயுதங்கள் இருப்பதால் நாடு முழுவதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என்றும் நேற்று முன்தினம் பாராளுமன்றில் அவர் தெரிவித்தார்.

முன்னதாக இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ரி -56 ரக துப்பாக்கிகள் 78 திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், இதுவரை 36 துப்பாக்கிகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

நாட்டின் திட்டமிட்ட குற்றக் குழு, போதைப்பொருள் அச்சுறுத்தலை அரசாங்கம் வேரறுக்கும். இந்த நோக்கத்துக்காக முறையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 2018 கால செயல்திறனை விமான போக்குவரத்து துறை எட்டவில்லை

கொழும்பு, ஒக். 25

விமான போக்குவரத்துத் துறையானது 2021ஆம் ஆண்டுக்கு பின்னர் சீரான வளர்ச்சியை காட்டுகிறபோதிலும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முந்தைய ஆண்டான 2018ஆம் ஆண்டின் உச்சபட்ச செயல்திறனை இன்னும் எட்டவில்லை என்று அண்மைய அரசாங்கத் தரவுகள் காட்டுகின்றன.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் விமான நிலையங்கள் ஊடாக 75 இலட்சத்து 60 ஆயிரம் பயணிகள் பயணித்துள்ளனர். அத்துடன், இந்த ஆண்டு இறுதியில் இந்த தொகை ஒரு கோடியே 3 இலட்சத்து 60 ஆயிரத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், இது 2018ஆம் ஆண்டில் பதிவான ஒரு கோடியே 8 இலட்சத்து 80 ஆயிரம் சர்வதேச பயணிகளின் எண்ணிக்கையை விடக் குறைவாகும்.

இதேநேரம், கடந்த ஆண்டு 56 ஆயிரத்து 286 சர்வதேச விமானங்களை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனம் கையாண்டது. இது, 2018 ஆம் ஆண்டின் உச்சபட்ச அளவைவிட 16.4 சதவீதம் குறைவாகும். இருப்பினும், இந்த ஆண்டு 64 ஆயிரத்து 569 சர்வதேச விமானங்களை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனம் கையாளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சர்வதேச பயணிகள் போக்குவரத்து 14.1 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில், சர்வதேச விமானங்களின் இயக்கமும் 15.4 சதவீதம் உயர்ந்துள்ளது. இருப்பினும், இந்த ஒன்பது மாத காலத்தில் சரக்கு போக்குவரத்து 4 சதவீதம் குறைந்துள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

(ஐ)

# போலி கடவுச்சீட்டுடன் வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஒக். 25

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்குள் நுழைய முயன்ற வெளிநாட்டவர் ஒருவர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் செனகல் நாட்டு பிரஜை பிரேசில் நாட்டு போலி கடவுச்சீட்டை வைத்திருந்தார் என்றும் அவரை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் நேற்று முன்தினம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

35 வயதான குறித்த நபர் வியாழக்கிழமை காலை 05.45 மணிக்கு கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். விமான சேவைகளை உறுதிப்படுத்த கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு நுழைவாயிலுக்கு சென்று தனது பிரேசிலிய கடவுச்சீட்டை வழங்கியுள்ளார்.

இதன்போது அது போலியானது என்று தெரிய வந்தது. இதன்பின்னர், அவர் மறைத்து வைத்திருந்த செனகல் நாட்டின் கடவுச்சீட்டையும் நேபாளத்தின் காத்மண்டுவுக்கான விமான பயணச்சீட்டையும் அதிகாரிகள் கண்டுபிடித்தனர். (ஐ)

# பெக்கோ சமனின் மனைவிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 25

பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவரான பெக்கோ சமனின் மனைவி சாதிகா லக்ஷானியை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த வழக்கிலேயே கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் இந்தக் கட்டளையை பிறப்பித்தது.

நிதிதூய்தாக்கல் தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளார் என்று பெக்கோ சமனின் மனைவி மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. அவரின், அவருடைய உறவினர்களின் 13 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அரிசிக்கு விலை நிர்ணயத்துக்கு விவசாய அமைப்புகள் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 25

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அதிகபட்ச விலையை நிர்ணயித்து அண்மையில் வெளியான வர்த்தமானிக்கு விவசாய அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

குறித்த வர்த்தமானி அறிவிப்பு நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களுக்கு பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாய அமைப்புகளும் ஆலை உரிமையாளர்களும் அரசாங்கத்தின் குறித்த திட்டத்துக்கு தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

நாட்டில் ஏற்கனவே நாடு மற்றும் பச்சை அரிசி உபரியாக இருக்கும்போது இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் வெளியிடுவது சிக்கலாக உள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் விவசாயத்தை அழிக்கும் பிரசாரத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா அல்லது பெரிய ஆலை உரிமையாளர்களுக்கு பயந்து செயல்படுகிறதா என்ற சந்தேகம் இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். (ஐ)

# சீரற்ற காலநிலை நால்வர் மரணம்!

கொழும்பு, ஒக். 25

நாட்டின் 16 மாவட்டங்களில் நிலவிய கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் நால்வர் உயிரிழந்தனர். அத்துடன், 5 ஆயிரத்து 361 குடும்பங்களை சேர்ந்த 21 ஆயிரத்து 778 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவால் 2 வீடுகள் முழுமையாகவும் 591 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் விலை கணிசமாக அதிகரிப்பு: குற்றங்களை தடுத்து நிறுத்த உதவுக

## சாய்ந்தமருது பொலிஸார் விசேட அறிவித்தல்

சாய்ந்தமருது, ஒக். 25

தங்கத்தின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதால் சேமித்து வைக்கும் போதும் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருங்கள் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் குற்றங்களைத் தடுக்க பின்வரும் அம்சங்களின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்களான உங்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் விடுத்துள்ள விசேட அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு நபர்கள் உங்கள் வீட்டையும் உங்கள் சொத்துகளையும் திருடுவதைத் தடுக்க பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1. உங்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பிற வாகனங்களை நிறுத்தும் போது வாகனத்தின் சாவியை உங்களுடன் வைத்திருப்பதை உறுதி செய்து அதை பாதுகாப்பான இடத்தில் நிறுத்துங்கள்.

2. துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தும் போது அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

3. உங்கள் பசுக்கள் மற்றும் பிற கால்நடைகளைப் பாதுகாப்பாக வேலியிட்டு அடைத்து வைக்க நடவடிக்கை எடுக்கவும்.

4. வீட்டை விட்டு வெளியே செல்லும் போது கதவுகள் மற்றும் ஜன்னல்களை பூட்டி சாவியை உங்களுடன் வைத்திருங்கள். அவற்றை ஒருபோதும் பாதுகாப்பற்ற இடங்களில் விட்டுச் செல்ல வோண்டாம்.

5. தங்கப் பொருட்களை சேமித்து வைக்கும் போதும் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருங்கள். குறிப்பாக இந்த நாட்களில் தங்கத்தின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதால், நீங்கள் வீதியில் நடந்து செல்லும் போது சந்தேகத்துக்கு இடமான நபர்கள் உங்களைப் பின் தொடர்கிறார்களா? அல்லது உங்களைக் கடந்து செல்கிறார்களா? என்பதை அறிந்து கொள்ளுங்கள்.


6. சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் பொருட்களை வாங்கும் போது நீங்கள் ஏதேனும் தங்க நகைகளை அணிந்திருந்தால் மிகவும் கவனமாக இருங்கள்.

7. நீங்கள் வசிக்கும் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் யாராவது வந்து சுற்றித் திரிந்தால் அவர்கள் வரும் வாகனங்களின் இலக்கத் தகட்டு எண்கள், அவர்கள் வரும் திகதிகள் மற்றும் நேரங்களை குறித்துக் கொள்வது அல்லது அந்தச் சந்தர்ப்பங்களை அவர்களுக்குத் தெரியாமல் உங்கள் தொலைபேசியில் வீடியோ எடுப்பது குற்றங்களைத் தடுக்க நீங்கள் வழங்கக் கூடிய ஒரு சிறந்த சேவையாகும்.

8. பொதுமக்களாகிய உங்களிடம் தொழில் பெற்றுத் தருவதாக அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்பவதாகக் கூறி சில நபர்கள் பணம் வாங்கக்கூடும். அவ்வாறான நபர்களிடம் ஏமாற வேண்டாம்.

9. ஏதேனும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை நீங்கள் உணர்ந்தால், அந்தப் பகுதிவாசிகளாகிய உங்களை பின்வரும் தொலைபேசி எண்களில் உடனடியாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் - தொ.இல: - 067-2221916, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி - தொ.இல: 071-8592805 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-01)



# அம்பாறையில் நகை திருட்டு! நான்கு சந்தேகநபர்கள் கைது

கல்முனை, ஒக். 25

அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளில் தங்க நகைகளைத் திருடிய நான்கு சந்தேகநபர்கள், அம்பாறை பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க ஆபரணங்கள், 6 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் கினியாகல, சம்மாந்துறை, மத்திய முகாம் மற்றும் அம்பாறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், திருடப்பட்ட தங்க ஆபரணங்கள் அம்பாறை நகரில் உள்ள ஒரு நகைக்கடையில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அந்தக் கடையின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதமாக அம்பாறை மாவட்டத்தில் தங்க ஆபரணத் திருட்டு சம்பவங்கள் அதிகரித்திருந்த நிலையில், இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தக் கைதுகள் நடைபெற்றன.

சந்தேகநபர்கள் பரிகஹகலே மற்றும் வாவின்ன பிரதேசங்களைச் சேர்ந்த 27 முதல் 31 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் போதைப்பொருள் பழக்கத்தால் இத்தகைய குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிந்தவூர் தவிசாளரின்

# இடைக்கால தடை கோரிய வழக்கு மீள ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 25

அகில இலங்கை மக்கள் காங்கிரஸால் உறுப்புரிமை நீக்கப்பட்டமைக்கு எதிராக அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் ஏ. அஸ்பரால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால தடைவிதிக்குமாறு கோரிய வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தவிசாளரால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-06)

# வான்- டிப்பர் மோதி கோர விபத்து: ஒருவர் உயிரிழப்பு! 8 பேர் காயம்

வாழைச்சேனை, ஒக். 25

மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் வாழைச்சேனை, வாகனேரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வானும் டிப்பரும் நேருக்கு நேர் மோதியதில் வான் சாரதி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பெண்கள் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வாழைச்சேனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அங்கு ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவர் 74 வயதுடைய வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வான் அதே திசையில் முன்னால் சென்ற பவுசர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்த் திசை யில் வந்த டிப்பர் வாகனத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதியும் காயமடைந்து வாழைச்சேனை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ)

# மெண்டி போதையுடன் ஒருவர் கைதானார்

திருகோணமலை, ஒக. 25

திருகோணமலை பிரதான தபால் நிலையத்தில்,மெண்டி என்ற போதைப்பொருள் அடங்கிய 02 வெளிநாட்டு பொதிகளை, திருகோணமலை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபரொருவரையும் கைது செய்தனர்.

இந்த இரண்டு பொதிகளும் பெல்ஜியம் நாட்டிலிருந்து அஞ்சல் பொதி மூலம் திருகோணமலை பிரதான தபால் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

டுபாயில் உள்ள மூதூர், ஜாயா நகரைச் சேர்ந்த நௌசாத் என்பவர் இவ் இரண்டு பொதிகளையும் தபால் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு சந்தேக நபருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பொதிகளை பெற்றுக் கொள்ள 26 வயதுடைய சந்தேக நபர் தபால் அலுவலகத்துக்கு வருகை தந்த போதே துறைமுக பொலிஸ் நிலைய பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# திருகோணமலை மாவட்ட விவசாய குழுக்கூட்டம்

திருகோணமலை, ஒக். 25

திருகோணமலை மாவட்ட விவசாய குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த விவசாய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்னைகள் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் காணப்பட்டன.

மேலும், திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறை சார்ந்த பல்வேறு பிரச்னைகள் மற்றும் பிரதேச செயலக விவசாய குழுக்கூட்டத்தில் இருந்து மாவட்ட செயலகத்துக்கு முன்மொழியப்பட்ட பிரச்னைகளும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் காணப்பட்டன.

அத்துடன் தேசிய உர செயலகத்தின் மாவட்டத்துக்கான பிரதிப் பணிப்பாளர் எச். ஜி. எஸ். பிரேமரத்னவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தின் 2025 - 2026 பெரும்போகத்துக்கான உர விநியோகம் தொடர்பாகவும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டத்துடன் தேசிய வேலைத் திட்டங்களுக்காக செயல்பாட்டு குழுக்களும் உருவாக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.(எ-12)

# மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து நகர் பகுதிக்குள் வந்த யானைகள்

மட்டக்களப்பு, ஒக். 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிப்பாளையம் மற்றும் குருக்கள் மடம் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மித்ததாகவுள்ள சதுப்பு நிலப்பரப்புக்குள் இரண்டு காட்டு யானைகள் நடமாடித் திரிவதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்பு பகுதியிலிருந்து மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து மீண்டும் எழுவாங்கரைப் பகுதியான நகர் பகுதியிலுள்ள சதுப்பு நிலங்களில் சுற்றித்திரியும் இந்த காட்டு யானைகளை அப்புறப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் வெல்லாவெளி பகுதி வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கைக்கு இணங்க அப்பகுதிக்கு வந்த வெல்லாவெளி பகுதி வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், காட்டு யானைகளை துரத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

தெரிவித்தார்.

இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் எதிர்ப்பதாகவும் பிரதமர், பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் நம்பகமான உள்நாட்டு பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார். (அ)

## செவ்வந்தி...

இந்த ஆனந்தன், மீன்பிடிப்பதற்காகக் கடற்றொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட படகே நேற்று முன் தினம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

7598 என்ற இலக்கத்துடன் காணப்படும் படகு தற்போது யாழ். பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (அ)

## சட்டவிரோதமான...

வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, குறித்த எட்டுப் பேருக்கும் எதிரான விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்த எட்டு பேரில் மூவருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்திலும், ஐவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவருக்கு எதிராக, போதைப்பொருள் கடத்தலில் ஈடு பட்டு சொத்து சேர்ந்த குற்றச்சாட் டும், ஏழு பேருக்கு எதிராக வன் முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுச் சொத்து சேர்ந்த குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன.

வன்முறைகளில் ஈடுபட்டு சொத்துச் சேர்த்தவர்கள், வன்முறைகளை ஒழுங்கமைத்தவர்களுக்கு எதிராக எதிர்வரும் நாள்களில் சிறப்புப் புலனாய்வு விசாரணைகளை மேற் கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (அ-05)

## பனைசார்...

வாய்மூலக்கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளுக்கு பனைசார் தொழில்களில் ஈடுபட அவர்களுக்கு தேவையான உதவித் திட்டங்களையும் கடன் திட்டங்களையும் நாங்கள் தயார் செய்துள்ளோம். இதன் மூலம் நாங்கள் உதவி வழங்க முடியும், தற்போது அதையும் வழங்கி வருகிறோம்.

நாட்டினுள்ளும் வெளிநாட்டிலும் வாழும் இலங்கையர்களை, குறிப்பாக முதலீட்டாளர்களை, அழைத்துள்ளோம். அவர்கள் பனை தொழிலில் முதலீடு செய்தால் அதற்குத் தேவையான நில வசதிகளை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம்.

குறிப்பாக, இந்த நாட்டில் தேயிலை, தேங்காய் மற்றும் ரப்பர் ஆகியவற்றிற்கு பெரிய நிலப்பரப்புகள் உள்ளன. ஆனால் பனை மரத்திற்காக அவ்வாறாக நிலப்பரப்பு இல்லை. மாறாக காடுகள், வீடுக் காணிகள் , வீதி ஓரங்கள் உள்ளிட்ட பகுதிகளிலேயே உள்ளன.

இலங்கையில் சுமார் 1.11 கோடி பனைமரங்கள் உள்ளன. ஆனால் ஒரே இடத்தில் இந்த மரங்கள் இல்லை. மாறாக வெவ்வேறு பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன. ஆகவே முதலீட்டாளர்கள் கிடைக்கும் பட்சத்தில் ஒரே பகுதியில் சட்ட ரீதியாக இடங்களை ஒதுக்கி குறித்த உற்பத்தியை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்ய தயாராகவுள்ளோம்.

அதற்காக முதலீட்டாளர்களை அழைக்கிறோம், மேலும் அரசாங்கம் என்ற வகையில் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க தயாராக இருக்கின்றோம் - என்றார். (அ)

## வெளிநாடுகளால்...

வீட்டில் இருப்பார். ஆனால் நாட் டைக் காட் டிக்கொடுக்கமாட்டார்.

நாம் ஏன் ரணிலின் பின்னால் நிற்கின்றோம் என சிலர் கேட்கின்றனர். வெளிநாட்டு சக்திகளால் அடிபணிய வைக்க முடியாத தலைவர்தான் அவர். இதுதான் பிரதான காரணம் என்பதை கூறிக் கொள்கின்றேன் - என்றார். (அ)

## டில்லி...

புதுடில்லிக்கு அழைத்துப் பேசிய இந்திய அரசு, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இந்தியாவுக்கு அழைத்திருப்பது முக்கிய விடயமாகப் பேசப்படுகின்றது. (அ)

## ஏற்றுமதி...

ஏற்றுமதி அபிவிருத்தி சபை தனது அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பரில் மட்டும், பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்த ஏற்றுமதிகள் 1,469.75 மில்லியன் அமெரிக்க டொலர்களை.

இது 2024 செப்ரெம்பர் மாதத்தை விட ஆண்டுக்கு ஆண்டு 12.33 வீத வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. (அ)

## அவுஸ்திரேலிய...

இதனையடுத்து, சந்தேகநபர்களை, மன்னார் நீதிமன்றில் பிரசன்னப்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த இருவரும் 180 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்களை மோசடி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட முதலீட்டாளரால், மன்னார், நானாட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் ஓமந்தை ஆகிய பகுதிகளில், பல வணிகங்களை ஆரம்பிப்பதற்காக, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவருக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியே மோசடி செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த சம்பவத்தின் முக்கிய சந்தேகநபர் ஒருவரும் அவரது மனைவியும் தற்போது தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## போர்க்காலத்தை...

நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

வெலிகம துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமானது படு பயங்கரமாகும். தமக்கு பாதுகாப்பு வேண்டுமென துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் அது வழங்கப்படாத சூழ்நிலையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாட்டில் 30 வருடகாலம் போர் நிலவியது. இக்காலப்பகுதியில் புலிகள்கூட இவ்வாறு அச்சமின்றி அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளை கொல்லவில்லை. ஆனால் ஜே.வி.பி. ஆட்சியின்கீழ் அவ்வாறான தொரு நிலை ஏற்பட்டுள்ளது. இது ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தமாகும்.

நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுசெல்வதற்காக பாதாள குழு என்ற போர்வையில் தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்கள் நாய், பூனைகள்போல சுட்டுக்கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது. பாதாள குழுக்களை ஒடுக்குகின்றோம் என்ற போர்வையில் அக்குழுக்கள் பலப்படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேகமும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ)

# சீன-அமெரிக்க வர்த்தக போர் இலங்கைக்கு பெரும் பாதிப்பு!

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 25

அமெரிக்க வரிகளின் தாக்கத்திலிருந்து விடுபட இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகள் தடைகளை குறைக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பிராந்திய வர்த்தகத்தை ஒன்றிணைக்க வேண்டும் எனவும் குறித்த நிதியம் கோரியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள பொருட்கள் உற்பத்திக்கான விநியோகச் சங்கிலி மையமாக சீனா செயற்படுவதால், ஆசியாவின் பொருளாதார வளர்ச்சியில் சீனா வர்த்தகம் மையமாக கருதப்படுகின்றது.

இந்த நிலையில், சீனா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான வர்த்தக போர், இலங்கை உட்பட்ட ஏனைய ஆசிய நாடுகளை பாதிப்பதாக சர்வதேச நாணய நிதியம் சுட்க்காட்டியுள்ளது. (அ)

# எம்.பி.க்களுக்கு பாதுகாப்பில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஒக். 25

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் இது ஒரு தீவிர பிரச்னையாக கருதப்படுவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், வெலிகம பிரதேச சபைத் தலைவர் காவல்துறையினரிடம் கோரிக்கை விடுத்த போதிலும், அவருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படாததால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதே போன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றனர்.

இது நகைச்சுவையல்ல. ஒருவர் கொல்லப்பட்டால் என்ன செய்ய முடியும்? வெலிகம சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.(அ)

# கச்சாயில் துப்பாக்கி சூடு; இளைஞன் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.25

தென்மராட்சி கச்சாய் துறைமுகப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இரவு 7:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சி கெற்போலி பகுதியில் சட்டவிரோதமாக அகழ்ந்த மணலை ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை கச்சாய் துறைமுகப் பகுதியில் பொலிஸார் இடைமறித்தனர். இதன்போது பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த உழவு இயந்திரத்தின் மீது துப்பாக்கி சூடு நடடத்தப்பட்டது. இதன்போது உழவு இயந்திரத்தின் சாரதி படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த சாரதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சம்பவத்தில் பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 20 வயதான மாணிக்கவாசகர் மதுசன் என்ற இளைஞரே படுகாயமடைந்தார். (03)

# யாழ். திரைப்படக் கழகத்தின் மாதாந்த படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். திரைப்படக் கழகத்தின் 17 ஆவது திரையிடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் கந்தர் மடத்தில் உள்ள அம்மன் வீதி, எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு 'விராகய' என்ற பெயரில் எடுக்கப்பட்ட இச் சிங்களத் திரைப்படத்தை திஸ்ஸ அபயசேகர நெறிப்படுத்தி இருக்கிறார். ஆங்கிலத் துணைத் தலைப்புடன் காண்பிக்கவிருக்கும் இத்திரைப்படம் 1987 இல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மாகாண...

செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டுக்கான சூழல் கனிந்துள்ளது. இதை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த வகையில் த மனேஜ்ட்மன்ட் கிளப் வடக்குக்கான முதலீட்டாளர் மாநாட்டை ஒழுங்குபடுத்துகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடத்துவதற்கு அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், தொழில்துறை அமைச்சகங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஆதரவுடன் இந்த மாநாட்டை முன்னெடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மாநாட்டுக்குத் தேவையான எமது வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தகவல்கள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் தொடர்பான ஒத்துழைப்புக்களை வழங்குவதன் ஊடாக, எமது மாகாணத்தை மேம்படுத்த முடியும். உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4.2 வீதமே பங்களிப்புச் செய்கின்றது. அதனை ஆகக் குறைந்தது 10 வீதமாகவேனும் உயர்த்தவேண்டும். அதற்கு இவ்வாறான முதலீட்டாளர் மாநாடுகளும் அதன் ஊடாக எமது மாகாணத்தை நோக்கி முதலீட்டாளர்களும் வரவேண்டும்.

முதலீட்டாளர்கள் இங்கு வருகின்ற போது அவர்களுக்கான ஒத்துழைப்புக்களை அரசாங்க அதிகாரிகள் வழங்க வேண்டும். அதேநேரம், மக்களும் முதலீடுகளை எதிர்க்காமல் அந்த முதலீடுகள் ஊடாக எமக்குத் தேவையானவற்றை பேரம்பேசிப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார் ஆளுநர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கு ரயில்களில் உறங்கும் பெட்டிகள் இணைக்கப்படாது

## போக்குவரத்து பிரதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 25

**வடக்குக்கான ரயில்களில் உறங்கும் பெட்டிகளை இணைப்பதற்கு எதிர்பார்க்கவில்லை. அதற்கு பதிலாக குளிரூட்டப்பட்ட சொகுசு ஆசனங்களுடான பெட்டிகளை இணைக்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் சிறீதரனின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2014தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் புகையிரத திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் 8 வீதமானவை வடக்கு, கிழக்கு புகையிரத நிலையங்கள் ஊடாகக் கிடைத்துள்ளன.

இதேவேளை வடக்கு மாகாண புகையிரத நிலையங்களில் சிங்கள மொழியில் 14 பேரும், தமிழ் மொழியில் 68 பேரும் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளாக பணியாற்றுகின்றனர். இவர்கள் தவிர மற்றைய அதிகாரிகளில் சிங்கள மொழியில் 52 பேரும், தமிழ் மொழியில் 64 பேரும் இருக்கின்றனர்.

அத்துடன், வடக்கில் 23 பிரதான புகையிரத நிலையங்கள் அடங்கலாக மொத்தமாக 41 புகையிரத நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையில் 16 பிரதான புகையிரத நிலையங்களும் 13 உப புகையிரத நிலையங்களும் உள்ளன. மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையில் 7 பிரதான புகையிரத நிலையங்களும் 4 உப புகையிரத நிலையங்களும் உள்ளன. கிழக்கில் 18 பிரதான புகையிரத நிலையங்கள் அடங்கலாக 14 புகையிரத நிலையங்களும் இருக்கின்றன.

இதேவேளை உறங்கும் பெட்டிகள் அடங்கிய ரயில்கள் எதுவும் இது வரையில் சேவையில் ஈடுபடவில்லை. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய ரயில் பெட்டிகளே இணைக்கப்பட்டுள்ளதால் பழைய உறங்கும் பெட்டி சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக குளிரூட்டப்பட்ட பெட்டியுடனான பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன - என்றார்.

இதன்போது, சிறீதரன் எம். பி., இனிவரும் நாட்களிலாவது ரயில்களில் உறங்கும் பெட்டிகள் இணைக்கப்படுமா? அதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர், உறங்கும் பெட்டிகளை இணைத்தால் அதில் குறைந்தளவான பயணிகளே - 12 பேரே பயணிக்க முடியும். ஆனால் குளிரூட்டப்பட்ட சொகுசு பெட்டிகளில் 48 பேர் வரை பயணிகள் பயணிக்க முடியும். இதனால் உறங்கும் பெட்டிகளை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை - என்றார். (ஐ)

## மருத்துவமனைக்குள் நின்றிருந்த மோ. சைக்களில் தோட்டாக்கள்!

கொழும்பு, ஒக். 25

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்களிலிருந்து துப்பாக்கி தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மருத்துவமனையின் ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்களிலிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையிலேயே துப்பாக்கி தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் - 5, 9 மில்லிமீற்றர் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (ஐ)

## விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 25

வீதியை கடக்க முயன்றவர் கார் மோதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

மொனராகலை - மாத்தறை வீதியில் லுனுகம்வெஹெர பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராமையை சேர்ந்த 64 வயதுடையவர் என்று தெரிய வந்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெள்ளைக் கொடி விவகாரம்: முறையான விசாரணை தேவை

## கோடீஸ்வரன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக். 25

இறுதிப் போரின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பொது மக்கள், விடுதலை புலிகள் சவேந்திர சில்வாவின் அனுமதியடனேயே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில், முறையான விசாரணை செய்து அதனுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், அண்மையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு விடயத்தை கூறியிருந்தார். அதாவது 2009இல் இறுதி போரில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பொது மக்கள், விடுதலைப் புலியினரை சவேந்திர சில்வாவின் அனுமதியுடன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள், அப்போதிருந்த இராணுவத்திற்குரிய செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2009இல் இருந்து இன்னும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தவரே சரணடைந்த தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்று கூறியிருக்கின்றார். அவர்களுக்கான விசாரணைகளை கடந்த அரசாங்கமும் செய்யவில்லை, இந்த அரசாங்கமும் செய்யவில்லை.

இதனாலேயே தமிழ் மக்கள் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச விசாரணையை கோருகின்றோம். இந்த சர்வதேச விசாரணைகளின் மூலமே இதனுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகளை தண்டிக்க முடியும். உள்நாட்டு பொறிமுறை ஊடாக இவர்களை தண்டிக்க முடியாது. இதனாலேயே சர்வதேச விசாரணையை கோர வேண்டியவர்களாக இருக்கின்றோம் - என்றார். (ஐ)

## போதைப்பொருளை ஒழிக்க நாடு ஒன்றிணையவேண்டும்

### ஜனாதிபதி அநுர குமார அழைப்பு

கொழும்பு, ஒக். 25

அரசியல், பொருளாதார விடயங்கள் குறித்து விவாதிக்க முடிந்தாலும், நாட்டிலிருந்து போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதில் இனிமேலும் விவாதித்துக் கொண்டிருப்பதற்கு இடமில்லை. போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்கான துரித வேலைத்திட்டத்திற்காக முழு நாடும் ஒன்றுபட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்தினார்.

ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றக் கும்பல்களின் நிதி பலம் என்பன பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு, அரச பொறிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சியைக்கூட வீழ்ச்சியடையச் செய்து நாட்டையும் சமூகத்தையும் அழித்து வருகிறது. தற்போதைய அரசாங்கம் இந்த அச்சுறுத்தலுக்கு இனிமேலும் இடமளிப்பதில்லையென முடிவு செய்துள்ளது. இதற்காக அனைவரின் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

## செவ்வந்தி தப்ப உதவிய நால்வருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக். 25

இஷாரா செவ்வந்திக்கு நாட்டை விட்டு தப்பிச் செல்ல உதவிய பெண்கள் இருவர் உட்பட நால்வரையும் பிரதான துப்பாக்கிதாரியையும் எதிர்வரும் நவம்பர் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி பாதாள உலக கும்பலை சேர்ந்த கணேமுல்லை சஞ்சீவ என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு உடந்தையாக இருந்த இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் சென்றிருந்த நிலையில், கடந்த 14ஆம் திகதி நேபாளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவருடன் மேலும் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே இஷாரா செவ்வந்தி தப்பிக்க உதவிய நால்வரை நீதிமன்றம் விளக்கமறியலில் வைத்துள்ளது.

## லெமன் வால் நட்சத்திரத்தை இலங்கையர் காண வாய்ப்பு

கொழும்பு, ஒக். 25

'லெமன்' என்று அழைக்கப்படும் 'C/2025 A6' வால் நட்சத்திரத்தை இலங்கையர்கள் காண முடியும் விண்வெளி விஞ்ஞானியும் பொறியியலாளருமான கிஹான் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சூரிய அஸ்தமனத்திற்கு பின்னர், மாலை 6.30 மணி முதல் சுமார் 30 தொடக்கம் 45 நிமிடங்கள் வரை இந்த வால் நட்சத்திரத்தை காண முடியும்.

மழை இல்லாத நேரங்களில் - தெளிவான வானில் - நாட்டின் மேற்கு கடற்கரையிலிருந்து இந்த வால் நட்சத்திரத்தை எளிதாகக் காணலாம் - என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் உள்ள மவுண்ட் லெமன் ஆய்வகத்தில் இந்த இந்த வால் நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையால் அதற்கு லெமன் என்று பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதாள குழுவை சேர்ந்த 30 பேரின் சொத்துகள் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஒக். 25

பாதாள உலகக் குழுவை சேர்ந்த கெஹல்பத்தர பத்மே உட்பட சுமார் 30 பேரின் சொத்துகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சட்டவிரோத சொத்துகள் புலனாய்வு பிரிவு இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஏற்கனவே, பத்மேவுடன் தொடர்புடைய சொத்துகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில், கம்பஹா - கெஹல்பத்த பகுதியிலுள்ள சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான 28 பேர்ச் காணியும் உள்ளடங்கும் என்றும் தெரிய வருகிறது. இந்தக் காணி அண்மையில் சட்டரீதியாக முடக்கப்பட்டது.

இதேவேளை, லொகு பெட்டி என்றழைக்கப்படும் மற்றுமொரு பாதாள உலக குழு உறுப்பினரின் சட்டவிரோத சொத்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org